# இளைஞர்களை பாதாளத்துக்கு பயணிக்க தூண்டும் புண்ணியர்கள்

**பாசமிகு நண்பா,**

**நல்வாழ்த்துக்கள்!**

சமூக சீர்கேடுகளுக்கு திரைப்படங்கள் மட்டும் காரணம் என்றால், நிச்சயமாக இல்லை. ஆனால் அவைதான் முக்கியமான காரணம் என்பதை மறுக்கமுடியாது. திரைப்படங்களைப் பார்ப்பதால் மட்டும்தான் இளைஞர்கள் கெட்டுப் போகிறார்களா என்கிற கேள்வியில் அர்த்தமில்லை, திரைப்படங்களைப் பார்த்ததினால் கெட்டுப்போகிறார்கள் என்பது இமாலய உண்மை.

பொறுப்பான பதவியில் இருப்பவர்களும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர்களும் தங்களது செய்கைகளாலும் நடத்தைகளாலும் சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். குறிப்பாக இளைஞர்களின் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் திரைப்பட நடிகர்கள், நடிகைகள் பொறுப்புணர்வுடன் நடந்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். இதற்கு முன்னுதாரணமாக முன்னாள் முதல்வரும் திரையுலகில் அசைக்க முடியாத சக்தியுமாக இருந்த எம்.ஜி. ராமச்சந்திரன் தனது திரைப்படங்களில் மது அருந்துவது புகைப்பிடிப்பது உள்ளிட்ட பழக்கங்களை தான் நடிக்கும் கதாபாத்திரங்கள் மூலம் காட்சிப்படுத்துவதில்லை என்பதில் இறுதி வரை உறுதியாக இருந்தார். வன்முறையையும் தனிப்பட்ட, சமூக ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தும் பழக்கங்களை செல்வாக்குள்ள நடிகர்கள் திரையில் காட்சிப்படுத்துவது மக்களை தவறான பாதைக்கு கொண்டு செல்லும் என்பதை அவர் உணர்ந்து செயல்பட்டார்.

தற்போது தமிழக திரைப்பட வரலாற்றில் மிகப் பெரிய செல்வாக்கோடு அதிக ரசிகர்கள் பட்டாளத்தோடு வலம் வரும் நட்சத்திரம் திரு. ரஜினிகாந்த். அவர் நடித்து சமீபத்தில் வெளிவந்த "ஜெயிலர்" திரைப்படம் வரலாறு காணாத வசூலை பெற்று தந்ததாக மீடியாக்கள் பலநாட்கள் பல்லவி பாடின. அந்த திரைப்படத்தில் இப்படியொரு காட்சியாம். சிலரை தலைகீழாகத் தொங்கவிட்டு வில்லன் கதாபாத்திரம் சம்மட்டியால் அவர்களது தலையை அடித்து சிதறவிடுகிற அருவருப்பான கோரக் காட்சி. இதை எந்த மீடியாவும் கண்டு கொள்ளவில்லை.

இப்படியொரு காட்சியை எம்.ஜி. ராமச்சந்திரனோ, சிவாஜி கணேசனோ தங்கள் திரைப்படங்களில் நிச்சயமாக அனுமதிக்க மாட்டார்கள். இளைஞர்கள் பெருவாரியாக பார்க்கும் திரு. ரஜினிகாந்தின் திரைப்படத்தில் இப்படியொரு காட்சி அமைந்திருப்பதைத் தணிக்கை குழுவினர் எப்படி அனுமதித்தார்களோ? எவரும் கேள்வி எழுப்பியதாக தெரியவில்லை. பெரிய நடிகர், பிரபலமான தயாரிப்பாளர் என்றால் தணிக்கை குழுவினரும் பெரிய மனதுடன் செயல்படுவார்களோ என சாமானியன் கேட்கும் கேள்வி எம் காதில் விழுகிறது.

ரஜினிகாந்திற்கு அடுத்தபடியாக இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று அதிக ரசிகர் பட்டாளத்தை கொண்ட நடிகர் திரு. விஜய். அவர் விரைவில் அரசியலில் பிரவேசம் செய்யப் போவதாக ஊடகங்கள் ஊதிக்கொண்டிருக்கின்றன. அவரது புதிய படமான "லியோ" படத்தின் முன்னோட்ட காட்சியிலேயே அவர் சிக்ரெட் புகைப்பது போன்ற காட்சி முன்னிலைப்படுத்தப்பட்டிருப்பது சமூக ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்நாடு தனியார் பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஏ.என்.எஸ். பிரசாத் தனது அறிக்கையில் "இந்தியாவில் புகையிலைப் பொருட்கள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக பொது இடங்களில் புகைப்பிடிக்கவும் ஊடகங்களில் புகையிலை பொருள்களின் விளம்பரம் செய்யவும் தடையுள்ளது. அப்படியிருக்க நடிகர் விஜய் தனது திரைப்படத்தில் புகை பிடிப்பது போன்ற காட்சியை அமைத்திருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்" எனக்கூறியுள்ளார்.

புது தில்லியில் சாலையோர கடையில் உதவியாளராக வேலைப்பார்த்தவர் கொடூரமான முறையில் கொலைச் செய்யப்பட்டார். காவல்துறையினர் கண்காணிப்பு கேமராக்கள் உதவியோடு அந்த கொலையை செய்த மூன்று சிறார்களை பிடித்து விசாரித்தபோது பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

"புஷ்பா" என்ற திரைப்படத்தை பார்த்த இவர்கள் கொலைச் செய்து அதை வீடியோவாக பதிவு செய்து இன்ஸ்டாகிராமில் பதிவேற்றல் செய்தால் உடனே பிரபலமாகிவிடலாம் என்ற முடிவுக்கு வந்து, அதற்கான திட்டமிட்டு, இரு சிறார்கள் கத்தியால் குத்த ஒருவன் அதை தன் கைப்பேசியில் வீடியோவாக பதிவுச் செய்து கொண்டான். பதினெட்டு வயது நிரம்பாத அந்த மூன்று சிறார்களும் கைது செய்யப்பட்டு கைபேசியும் கைப்பற்றப்பட்டது.

தற்போது மூவரும் புது தில்லியில் உள்ள "கூர்நோக்கு இல்லம்" ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த கொலை வழக்கின் முடிவு என்னவாகும்? சீர்திருத்தப்பட்டு நல்ல குடிமக்களாக சமுதாயத்தில் இணைவார்களா? வரும் நாட்களில் இப்படிப்பட்டவர்களின் நிலை சமுதாயத்தில் எப்படியிருக்கும்? என அடுக்கடுக்கான பல கேள்விகள் எம்போன்றோரின் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

திரைப்படங்களின் காட்சி மற்றும் சமூக ஊடகங்களும் காதலையும், கவர்ச்சியையும், வன்முறையும் சமூக சீர்கேடுகளையும் பரப்புரை செய்து தங்கள் வருமானத்தை பெருக்குவதில் காட்டும் முனைப்பே இதற்கு முக்கிய காரணம். எந்தவிதத் தணிக்கைக்கும் உட்படாத ஓ டி டி தளங்கள் வந்தபிறகு, பிஞ்சு மனங்களில் நஞ்சைக் கலக்கும் அத்தனை அவலங்களும் தடையின்றி காட்சிப்படுத்தப்படுகின்றன. சமூக விரோதிகளையும் கொலையாளிகளையும் உருவாக்கும் திரைப்படங்களுக்கு கோடிக்கணக்கில் வரிச்சலுகைகளையும் விருதுகளையும் அள்ளி வழங்கும் நமது அரசுகளை என்னவென்று சொல்லுவது. மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்ற திரைப்பட நடிகர்களுக்கு சமூக பொறுப்புகள் உண்டு என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது என்பதை உரக்கச்சொல்லி, நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் விடைபெறுகிறேன்.

பாசத்துடன், **பரதேசி.**

**பரதேசியின் பக்கம்**

Return Reqested
The Editor
Maraineri
Paloor, Karungal - 629 157
K.K. Dist, Tamil Nadu.
Cell : 9487585762
Email : maraineriministries@gmail.com

To

Owned and Published by: Pr. D. Selvin Gnanadhas (D.S. Gnanadhas) D.No. 7-175, S.V.Vilas, Paloor, Karungal Post and Printed by: R. Jerold Nixon at Rose Offset Press,Fathima Buildig, Karungal Post. Editor : Pr. D. Selvin Gnanadhas (D.S. Gnanadhas)


# மறைநெறி

திங்கள் இருமுறை சுடர்

நிறுவனர் : Pr. D.S. ஞானதாசு

Volume 9 Issue 23, 24 MARAINERI SUDAR 2023 Dec. 1, Dec. 16

மறை 9 நெறி 23, 24 | சபைகளில் உயிர் மீட்சி! சமுதாயத்தில் மறுமலர்ச்சி!! | 2023 டிச. 1, டிச. 16


**தேன்துளி!**

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார் (யோவான். 12:26)

# நரகாக்கினைக்கு தப்பிக்கொள்!

நரகத்திற்கு விரோதமாய் பலரும் பலவிதமாய் பேசத் துணிந்திருக்கும் காலம் இது.

இக்காலத்தில் கர்த்தருடைய ஊழியக் காரரில் அநேகர் நரகத்தைப் பற்றியாவது, மறுமையைப் பற்றியாவது பேசாமல் விட்டுவிடுவதே புத்திசாலித்தனமானது என்றிருக்கிறார்கள்!

நரகம் இல்லையென்றால் மோட்சம் இல்லை. இவை இரண்டும் உண்டென்று அறிவித்தவர் இயேசு.

நாம் அறிந்து கொண்ட அநேக இரகசியங்கள் வானத்திலிருந்து வந்த கர்த்தரால் நமக்கு வெளிப்படுத்தப் பட்டவைகள்.

அவர் அவைகளை வெளிப்படுத்தா திருந்தால் மனுஷன் அவைகளை அறிந்துக் கொள்ளமாட்டான்.

விசுவாசிகள் அடையப் போகிற மோட்சத்தைக் குறித்தும், அவிசுவாசிகள் அடையப்போகிற நரகாக்கினையைப் குறித்தும் மகா திட்டமாய் இயேசு பேசியும் இருக்கிறார்.

இயேசு நரகத்தின் பயங்கரங்களை வெளிப்படுத்தினது நமது பேரிலுள்ள கோபத்தினால் அல்ல, நமது பேரில் வைத்த அன்பினாலேயே.

எங்கே, மோசங்களும் தீமைகளும் உண்டோ, அவைகளுக்கு மனுசர் தப்பிக் கொள்ளும்படி எச்சரிப்பின் அடையாளங் கள் நாட்டப்பட்டிருப்பதும் உண்டு.

நாம் சாலையில் வாகனத்தில் பிரயாணப் படும் போது நம்மால் பல எச்சரிக்கை பலகைகளை பார்க்க முடியும். இவை நம்முடைய பிரயாணத்தை பாதுகாப்பாக்குகிறது.

நாம் ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமல் எளிதாய் நம்மை பாதுகாத்துக் கொள்ள உதவி செய்கிறது. வரப்போகிற ஆபத்தை நம்மால் முன்கூட்டியே உணர்ந்து நம்மை பாதுகாக்க முடிகிறது.

இயேசு இரட்சகர் பாவிகள் பேரில் வைத்த பேரன்பினால் அவர்களை எச்சரிக் கிறவராக நின்று கொண்டு,

ஓ...... மனுசனே! கேட்டுக்கு பேகிற வாசல் வழியாய்ச் செல்ல வேண்டாம். உங்களுக்கு முன் பயங்கரமான நரகம் இருக்கிறது.

உங்களில் ஒருவனும் நரகத்துக்குப் போவது என்னை அனுப்பின பிதாவின் சித்தமல்ல.

நரகமானது உங்களுக்காக ஆயத்த மாக்கப்பட்ட இடமல்ல. அது பிசாசுக்காகவும் அவன் தூதருக்காகவும் ஆயத்தமாக்கப்பட்ட இடம்.

நீங்கள் எல்லாரும் எனக்கு செவி கொடுங்கள். நான் ஜீவ பாதையில் நடத்தி உங்களை மோட்சத்தில் சேர்ப்பேன் என்று அன்பாய் அழைக்கிறார்.

இப்படி இருக்க யாராகிலும் ஒருவன் நரகத்திற்குப் போவானாகில் அவன் தன்னைத்தானே நரகத்திற்கு தள்ளிக் கொள்ளுகிறானேயன்றி தேவன் தன்னைத் தள்ளிவிட்டாரென்று ஒரு போதும் சொல்ல மாட்டான்.

பிரிய சகோதரனே, அன்பு சகோதரியே நரகத்தின் பயங்கரத்தை கண்டு நாம் அதற்கு தப்பிக்கொள்ள திருவசனத்தினின்று சில காரியங்கள் கவனிப்போம்.

நரகம் எப்படிப்பட்ட இடம்?

நரகம் மகா வேதனையுள்ள இடம் லூக். 16:19-31 வரை "வேதனை" என்கிற வார்த்தை நான்கு முறை வருகிறது.

பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிற போது (2)

இந்த அக்கினி ஜூவாலையில் வேதனைப்படுகிறேனே (24)

அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் (25).

அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்தில் வராதபடி (27)

இவைகளினால் நரகம் மெய்யாகவே வேதனையுள்ள இடம் என்று அறிகிறோம். ஆத்துமா மாத்திரமல்ல சரீரமும் சேர்ந்து வேதனைப்படுகிற இடம்.

நீதிமான்கள் ஆவிக்குரிய மகிமையான சரீரங்களோடு எழுப்பப்பட்டு மோட்சத்தில் பிரவேசிக்கிறது போல அவிசுவாசிகளும் துன்மார்க்கரும் ஜென்ம சரீரங்களோடு எழுப்பப் பட்டு ஆக்கினை யடைவார்கள்.

"உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைத் பிடுங்கி எறிந்து போடு;

உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவையவங்களில் ஒன்று கெட்டுப் போவது நலமாயிருக்கும்" என்று இயேசுவே சொல்லி யிருக்கிறதைக் கவனிக்க வேண்டும் (மத். 5:29,30).

இதிலே சரீரம் நரகத்திலே தள்ளப்படு மென்கிற சத்தியம் காட்டப்படுகிறது மாத்திரமல்ல, ஒருவன் என்ன பாடுபட்டா கிலும் நரகாக்கினைக்குத் தப்பிக் கொள்ளப் பார்க்க வேண்டும் என்றும்,

நரகமானது எவ்வளவு கொடிய வேதனை யுள்ள இடமென்றும் காண்பிக்கிறார்.

## தேடி வாசியுங்கள் டிசம்பர் 2023

1. நிலத்தின் முதல் விளைச்சல்களில் முதற்கனியை எங்கே கொண்டுவர வேண்டும்?
2. தேவனுடைய ராஜ்யம் நீக்கப்பட்டு யாரிடத்தில் கொடுக்கப்படும்?
3. எதினால் பிதா மகிமைப்படுவார்?
4. யாருக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்க கொடுப்பார்?
5. நீதியின் கனியானது யாரால் எப்படி விதைக்கப்படுகிறது?
6. தூதாயீம் கனிகளால் யாக்கோபை கொண்டது யார்?
7. கர்த்தர் யாருடைய கனியை பூமியில் இராதபடி அழித்துப் போடுவார்?
8. யாருக்கு பூமியின் கனி சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்?
9. யார் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள்?
10. எது தனக்கு தானே கனிகொடுக்கிறது?

- **விடைகளை வேதத்தில் தேடிவாசித்து வசன இருப்பிடக் குறிப்போடு**

**தேடி வாசியுங்கள், மறைநெறி, (திங்கள் இரு முறை) பாலூர், கருங்கல் – 629 157 குமரிமாவட்டம்.**

**என்னும் முகவரிக்கு அனுப்பவும்.**

- **விடைகள் ஜனவரி 10–ம் தேதிக்குள் வந்து கிடைக்க வேண்டும்.**
- **சுய முகவரி, வாசகர் எண், தொலைபேசி எண், எந்த மாத விடை இவைகள் விடையெழுதும் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்**
- **மாதந்தோறும் ஐவர் பரிசு பெறுவர்.**

## முகநூலில் மறைநெறி

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் முகநூலின் Maraineri பேஜில் மறைநெறி பதிவேற்றம் செய்யப்படுகிறது. Google அல்லது Facebook வலைத்தளங்களில் சென்று "Maraineri" என்று டைப் செய்தால் மறைநெறி பேஜ் காண்பிக்கப்படும். அங்குள்ள தம்முடைய லிங்குகளில் கிளிக் செய்து முழு மறைநெறியையும் pdf வடிவத்தில் பதிவிறக்கம் செய்து வாசிக்கலாம் – பிரின்ட் செய்தும் கொள்ளலாம். தபாலில் தாமதமாய் வினியோகிக்கப்படுகிறவர்களுக்கும், கேள்வி பதில் பகுதிகளில் பங்கெடுப்பவர்களுக்கும் இது மிக பயனுள்ளதாக இருக்கும்.

*ஆத்துமாவை கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்;*

*ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்றார் (மத். 10:28).*

*ஆத்துமாவும், சரீரமும் சேர்ந்து அந்த அக்கினி ஜூவாலையில் வேதனப்படும் போது என்னமாயிருக்கும்? யோசித்துப் பாருங்கள்.*

*ஒரு நாள் தீயில் விழுந்துவிட்ட ஒரு ஸ்திரீயை மருத்துவமனைக்கு தூக்கிக் கொண்டு வந்தார்கள்.*

*அவளுடைய தலைமயிர் எரிந்து போய் விட்டது. அவளுடைய சரீரம் முழுவதும் அக்கினியில் வெந்து கறுத்துப் போயிருந்தது.*

*அவளுடைய முகத்தோற்றம் விகாரமடைந்து பார்க்க மிகப்பயங்கரமாயிருந்தது.*

*மருத்துவர் அவளுக்கு மருத்துவம் செய்ய அருகில் போன போது அவளுடைய வேதனையின் நிமித்தமாய் அவரை தூஷணமாய்ப் பேசினாள்.*

*இனத்தார் அவளுக்கு உதவிச் செய்ய நெருங்குகையில் மூர்க்கங்கொண்டு அவர்களையும் திட்டினாள்.*

*தன் பற்களைக் கடித்துக் கொண்டு பக்கத்தில் நின்றவர்கள் எல்லாரும் நடுங்கத்தக்கதாக ஒரு பயங்கரமான சத்தம் போட்டாள். சற்று நேரத்திற்குள்ளாக மரித்துப் போனாள்.*

*இந்த அக்கினியின் வேதனை இவ்வளவு கொடூரமாயிருக்குமானால் நரக அக்கினி எப்படியிருக்கும்?*

*‘அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்பதை சொல்லத் தான் வேண்டுமோ?’*

*நரகத்தில் விறகு உண்டோ? நெருப்பு உண்டோ? என்று அவிசுவாசிகள் பரியாசம் பண்ணுகிறார்கள்.*

*இந்த உலகத்தில் உள்ள எல்லா விறகுகளையும் சேர்த்துப் போட்டாலும் எரிந்து சாம்பலாய் போகமாட்டாதா? அதில் பற்றியெரிந்து நெருப்பும் அவிந்து போகாதோ?*

*‘காலம் வரும் முன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ? என்று பிசாசுகள் இயேசுவைக் கேள்வி கேட்டன.*

*ஆவியாயிருக்கிற பிசாசுகளுக்கு சாதாரண நெருப்பினால் எப்படி வேதனை உண்டாகும்?*

*நரக அக்கினியை குறித்து “அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்” என்றும்.*

*அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்” என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (மாற். 9:14; வெளி. 14:11).*

*இந்த நித்திய அக்கினியின் வேதனையைச் சகிக்கக்கூடியவன் யார்?*

*மலைகள் அக்கினியைக் கக்கி, பட்டணங்கள் அழிக்கப்படும்போது ஜனங்களுடைய அங்கலாய்ப்பும், கூக்குரலும் என்னமாயிருக்கிறது!*

*கர்த்தர் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்க செய்து சோதோம் கொமோராப் பட்டணங்களை அழித்த போது எவ்வளவு பயங்கரமான தேவனாக விளங்கினார்.*

*இந்த அக்கினியின் வேதனைகளெல்லாம் நரக அக்கினியோடு ஒப்பிடுவதற்கு எம்மாத்திரம்?*

*உள்ளும் புறமும் பற்றி எரிந்து பாவிகளை வேகாமல் வேகப்பண்ணுகிற இந்த அக்கினி எப்படிப்பட்டதென்று சொல்லக் கூடியவன் யார்?*

*நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார்.*

*இரண்டாவதாக, நரகம் நினைவு கூருகிற இடம்.*

*அந்த ஐசுவரியவான் “தூரத்தில் ஆபிரகாமையும் அவன் மடியில் லாசருவையும் கண்டு தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசருவின் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்.*

*இந்த அக்கினி ஜூவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். (லூக். 16:23,24).*

*அதற்கு ஆபிரகாம் மகனே, நீ பூமியில் உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான்.*

**முக்கிய அறிவிப்பு**

மணி ஆர்டர் வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள் பாஸ்டர் D.S. ஞானதாசு என்ற பெயரில் அனுப்ப வேண்டாம். பதிலாக கீழே கொடுக்கப்பட்டுள்ள மறைநெறி ஊழியங்களின் முகவரியை பயன்படுத்தவும்.

மறைநெறி, பாலூர், கருங்கல்–629 157, குமரி மாவட்டம்.



*இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதை நினைத்துக் கொள் என்றார் (லூக். 16:25).*

*இந்த ஐசுவரியவான் நரகத்தில் நினைவு கூர வேண்டிய அநேக காரியங்கள் இருந்தன.*

*தான் தேவனை மறந்து, சிற்றின்பத்தில் மகிழ்ந்து, ஆடம்பரமாய் நாட்களை கழித்ததையும்*

*ஏழை லாசரு கைவிடப்பட்டவனாய் தன் வாசலருகே கிடந்து சிறுமையையும், பாடுகளையும் அனுபவித்ததையும்.*

*இப்பொழுது அவன் அனுபவிக்கிற பாக்கியத்தையும், தான் அனுபவிக்கிற வேதனையையும் நினைத்து புலம்ப வேண்டிய காலம் வந்து விட்டது.*

*பரிய சகோதரனே, சகோதரியே ஒருவன் நரகத்திற்குப் போவானாகில் அவனுடைய செல்வமோ, ஆஸ்திகளோ, ஆடம்பர விருதுகளோ இன்னும் அவன் சேகரித்த இன்னொன்றோ அவனோடு சொல்வதில்லை.*

*ஆனால் ஒன்றே ஒன்று நிச்சயமாகவே அவனோடு போகும். அது அவனுடைய ஞாபகம்.*

*இம்மையில் அவன் பல இடங்களுக்குப் போய் பல மனுஷரோடு பேசி பல வேலைகளைச் செய்து தன் நாட்களைப் போக்கி விடுகிறான்.*

*தனது ஆத்ம நிலைமையை குறித்து யோசிக்க அவனுக்கு சமயமில்லை.*

*இவைகளெல்லாவற்றையும் விட்டு பிரிந்து அவன் நரகத்திலிருக்கும் காலத்தில் இம்மையில் அவன் நடப்பித்த சகல அக்கிரமங்களும், அந்தரங்க பாவங்களும் ஒன்று தப்பாமல் அவன் ஞாபகத்துக்கு வரும்.*

*இங்கே தூங்கிக் கொண்டிருக்கிற மனச்சாட்சி அங்கே விழித்துக் கொண்டு தன் வேலையை பலமாய் நடத்தும் ஐயோ! அந்த வேதனையை தாங்க முடியுமா?*

*கர்த்தருடைய வசனம் ஆவியின் பலத்தோடு பிரசங்கிக்கப்படும் காலத்தில் புருஷர்கள், ஸ்திரீகள் பாவத்தை உணர்ந்து கதறி அழுவதை பார்த்திருக்கிறோம்.*

*பல வருடங்களுக்கு முன்பு ஊழியர்களுக்கென்று விசேஷித்த கூட்டமொன்று நடத்தப்பட்டது.*

*முதல் இரண்டு நாட்களிலும் பிரசங்கித்தவர்கள் பாவத்தைக் குறித்து பலமாய்ப் பேசினார்கள்.*

*ஒரு நாள் மத்தியானம் நடந்த கூட்டத்தில் விருத்தாப்பியமுமான ஒருவர் அதிக வியாகுலத்தோடு அழுதுக் கொண்டேயிருந்தார்.*

*இவர் ஏன் இப்படி அழுகிறாரென்று நாங்கள் அறிந்து கொள்ளவில்லை. கூட்டம் முடிந்தது அவரையோ காணோம்.*

*அன்று மாலையில் இரண்டு சகோதரர்கள் கிராமத்துக்கு வெளியே தனிமையாய் நடந்து போனார்கள்.*

*தூரத்தில் அதிகப் போராட்டத்தோடு அழுகிற சத்தம் அவர்களுக்கு கேட்டது.*

*அவர்கள் இருவரும் சத்தம் வருகிற திசையை நோக்கி நடந்தார்கள்!*

*அங்கே அந்த முதியவர் ஒரு மரத்தின் கீழ் முகங்குப்புற விழுந்து அழுது கொண்டிருந்தார்.*

## அத்திப்பழம்

**அத்திப்பழத்தின் தனித்துவமான பண்புகளில் ஒன்று, நார்ச்சத்து அதிகம் கொண்டிருப்பது. குடல் இயக்கங்கள் சீராக நடைபெறுவதற்கு நார்ச்சத்து முக்கியமானது. தொடர்ந்து அத்திப்பழம் சாப்பிட்டு வந்தால் குடல் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவி புரியும்.**

**அத்திப்பழத்தில் சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்சிடென்டுகள் உள்ளன. அவை ஆக்சிஜனேற்ற அழுத்தத்தை எதிர்த்து போராடுவதற்கும், உடலில் தீங்கு விளைவிக்கும் பிரீ ரேடிக்கல்களை கட்டுப்படுத்துவதற்கும் உதவி புரியும்.**

**இதயத்திற்கு உகந்த பல்வேறு ஊட்டச் சத்துக்கள் அத்திப்பழத்தில் உள்ளன. ரத்த அழுத்தத்தை பராமரிக்க தேவையான எலக்ட்ரோலைட்டுகள் இதில் ஏராளம் உள்ளன.**

**மெக்னீசியம் மற்றும் நார்ச்சத்துக்கள் ரத்த நாளங்களின் செயல்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் இதய ஆரோக்கியத்தை பலப்படுத்துகின்றன. ரத்த அழுத்தத்தை சீராக்குவதற்கும் உதவி புரிகின்றன.**

**அத்திப்பழம் மிட்டாய் போன்ற லேசான இனிப்பு சுவையை கொண்டிருந்தாலும் குறைந்த கிளைசெமிக் குறியீட்டை கொண்டவை. அதனால் ரத்தத்தில் சர்க்கரை அளவை நிர்வகிப்பதற்கு பொருத்தமானதாக இருக்கும்.**

**இதில்இருக்கும் நார்ச்சத்து, சர்க்கரை உறிஞ்சப்படுவதை தடுக்க உதவி புரியும். குறிப்பாக நீரிழிவு நோயாளிகள் மற்றும் ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்த நினைப்பவர்களுக்கு பொக்கிஷமாக அத்திப்பழம் அமையும்.**

**அத்திப்பழம் சரும நலனையும் பாதுகாக்கக்கூடியது. சருமத்தில் கோடுகள், சுருக்கங்கள் தோன்றுவதை குறைத்து சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தும். அத்திப் பழத்தில் இருக்கும் சத்துக்கள் இயற்கையாகவே சருமத்திற்கு பளபளப்பு சேர்க்கக் கூடியவை.**

**அத்திகப்பழத்தில் மூச்சுக்குழாய் அழற்சி பண்புகளுடன் கூடிய சேர்மங்கள் உள்ளன. அவை நுரையீரல் செயல்பாட்டை மேம்படுத்தி ஆஸ்துமா போன்ற பாதிப்புகளில் இருந்து தற்காத்துக்கொள்ள உதவும்.**

**அத்திப்பழத்தில் உள்ள சத்துக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவும். குறிப்பாக வைட்டமின் சி போன்ற வைட்டமின்கள், துத்தநாகம் போன்ற தாதுக்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவதிலும், தொற்றுநோய்களிடம் இருந்து உடலை பாதுகாப்பதிலும், நோய்களை குணப்பத்த உதவுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.**

**அத்திமரம் வேறொரு முக்கியமான காரியத்தையும் காண்பிக்கிறது. அது தேவனின் வருகையை முன் குறிக்கிறது.**

**அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். (மத். 24:32)**

செய்தி : தினத்தந்தி (15.10.2023)

**மதிப்பீடு – மாதந்தோறும் உங்கள் மதிப்பீட்டை எமக்கு எழுதுங்கள். மறைநெறியில் வெளியிடுவோம்.**

## கவனியுங்கள்!

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள் மறைநெறியின் அக்கவுண்டை பயன்படுத்துங்கள்.**

**Account Number: 21130200000859**

**Name : Maraineri Pentecostal Mission**

**IFSC : FDRL0002113**

**Bank : The Federal Bank - Paloor Branch**

வங்கி மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 9487585762 என்னும் எண்ணுக்கு தொலைப்பேசி மூலமாகவோ, குறுஞ்செய்தி வழியாகவோ, மின்னஞ்சல் வழியாகவோ தெரியப்படுத்துங்கள்.

*மத்தியான கூட்டத்தில் அழ ஆரம்பித்தவர் இத்தனை மணி நேரம் விடாமல் அழுது கொண்டிருப்பானேன் என்று அவரையே அவர்கள் கேட்டார்கள்!*

*ஐயோ! என் பாவங்கலெல்லாம் என் கண்முன் வந்து விட்டதே. என் சிறு வயதின் பாவம், என் வாலிபத்தின் பாவம்,*

*நான் தேவ ஊழியத்தைச் செய்து வந்த காலத்திலும் நான் செய்த அக்கிரமம் எல்லாம் என் ஞாபகத்தில் வந்து என்னை வேதனைப்படுத்துகிறதே என்று தேம்பித் தேம்பி அழுதார்.*

*நாம் செய்த பாவங்கள் மாத்திரமல்ல, தேவன் நமக்கு அருளிச் செய்த சிலாக்கியங்களை நாம் அசட்டைப் பண்ணிப் போட்டதும் நரகத்தில் ஞாபகத்துக்கு வரும்.*

*ஐயோ! நரகம் எனக்குரிய இடமல்லவே. நான் நரகத்திற்குத் தப்பி கொள்ளவும் மோட்சத்தில் பிரவேசிக்கவும் எனக்கு எத்தனையோ நற்சமயம் கிடைத்ததுண்டே.*

*அவைகளை அசட்டை செய்ததால் இப்பொழுது மகிமையில் இருக்க வேண்டிய நான் வேதனையிலிருக்கிறேனே.*

*பக்தியுள்ள பெற்றோரைத் தந்திருந்தார். அவர்களுக்கு கீழ்ப்படியாடற் போனேன்,*

*நல்ல சிநேகிதரைக் கொடுத்தார், அவர்களுடைய ஆலோசனையை விரும்பவில்லை.*

*நல்ல போதகரைத் தந்திருந்தார். எழுப்புதலான அநேக பிரசங்கங்களையும் கேட்டேன். ஆனாலும் மனந்திரும்பாதபடி என் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டேன்.*

*அனேகந்தரம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி ஆவியானவர் என்னோடு போராடினதுண்டு. நான் பிந்தி பார்த்துக் கொள்ளலாம் என்றெண்ணி மோசம் போனேன்.*

*உபத்திரவங்கள் மூலமாகவும் என்னை பலமாய்ச் சந்தித்தார். அந்தச் சமயத்தில் என்னை அவருக்கு ஒப்புக் கொடுக்கத் தீர்மானித்தேன்.*

*சுகமான பின்போ மனதைக் கடினப் படுத்திக் கொண்டேன். ஆ! தேவன் எவ்வளவோ பொறுமையோடு என்னை இரட்சிக்கும்படி செய்யக்கூடியதெல்லாம் செய்துப் பார்த்தாரே!*

*நானோ இவைகளெல்லாவற்றையும் அசட்டை செய்து என்னை நரகத்திற்கு ஆளாக்கிக் கொண்டேனே என்று பாவி புலம்புவான்.*

*மனசாட்சியின் வேதனை தாங்க முடியாது. அது அவனை குத்திக் கொண்டேயிருக்கும்.*

*மூன்றாவது நரகம் தாகம் தீராத இடம்.*

*அந்த ஐசுவரியவான் தன் நாவை குளிரப் பண்ணும்படி ஒரு துளி தண்ணீருக்காக வேண்டிக்கொண்டான். ஆனால் அது அவனுக்கு கொடுக்கப்படவில்லை. நரகத்தில் தாகம் உண்டு!*

*அந்த தாகம் தீர்க்கப்படமாட்டாது. இம்மையில் மனுஷன் எவ்விதமாய் ஜீவிக்கிறானோ, அவ்விதமாகவே மறுமைக்குள் பிரவேசிப்பான்.*

*பொல்லாதவனை நல்லவனாக்கவோ, ஆக்கினைக்குரியவனை மோட்சத்துக்குரியவனாக்கவோ மரணத்திற்கு அதிகாரமில்லை.*

*இம்மையை விட்டு மறுமைக்குள் நித்தியத்துக்குள் பிரவேசிக்கும் வாசலே மரணம்.*

*ஒருவனை அவனுடைய நிழல் பின் தொடர்வது போல, பாவியின் ஆசாபாசங்கள் அவனைப் பின் தொடர்ந்து செல்லும்.*

*அவன் இம்மையில் விதைத்ததெதுவோ அதையே மறுமையில் அறுப்பான். விதைக்கிறது கொஞ்சமாயிருந்தாலும் அறுக்கிறது அதிகமாயிருக்கும்.*

*பொருளாசை, மதுபானம், பெருந்திண்டி, மாம்ச இச்சை, பேர்ப்பிரஸ்தாபம் இவைகளின்மேல் தாகங் கொண்டு அவைகளால் மனுஷன் ஆளப்பட்டு வருகிறான்.*

*அவன் ஜீவதண்ணீர் ஊற்றாகிய இயேசுவினிடம் வந்து தன் ஆத்ம தாகத்தைத் தீர்த்துக் கொண்டவனல்ல,*

*'இந்த தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்' (யோவா. 4:13) என்று இயேசு சொன்னபடி அவன் எவ்வளவாய்ப் பாவசந்தோஷங்களால் தன்னைத் திருப்தி செய்து கொள்ளப்பார்த்தாலும்,*

*அவனுடைய தாகம் காலத்துக்கு காலம் அதிகப்படுமேயன்றி குறையாது.*

*பொருளாசைக்காரன் மரண அவஸ்தைப் படுகையில் ரூபாயைத் தோய்த்து அந்தத் தண்ணீரை வாயில் விட பிராணன் பிரிகிறதென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.*

*வயது சென்றாலும் ஆசை குன்றாது. ஒருவன் பாவத்தோடு நரகத்திற்கு போனால், அவன் அனுபவித்த ஆசாபாசங்களில் ஒன்றையும் அங்கே காணமாட்டான் (வெளி. 18:14).*

*தகாத எண்ணங்கள் அதிகரிக்கும். அவைகள் திருப்தி செய்யப்படமாட்டாது.*

*இடைவிடாமல் குடிக்கிற ஒருவனை சாராயம் கிடையாத ஓர் காட்டில் கொண்டு போய் விட்டால் அவனுக்கு என்னமாயிருக்கும்.*

*இனி ஒரு போதும் சாராயத்தைக் காணப்போகிறதுமில்லை, ருசிக்கப் போகிறதுமில்லை என்கிற எண்ணத்தால் அவன் வெறிகொண்டு புலம்பமாட்டானா?*

## ஜெபியுங்கள்!

**ஆவியானவர் கொடுக்கிற ஆலோசனையோடு மறைநெறி மாதந்தோறும் வெளியிடப்பட தினமும் மறவாமல் ஜெபியுங்கள்.**

## பாறை வீடுகள்

**வீட்டின் மேற்பரப்பில் அமைக்கப்படும் கூரைகள் இப்போது கான்கிரீட் மயமாகி விட்டன. வெப்பமான காலங்களில் கடும் வெப்பத்தையும், குளிர் காலங்களிலும் ஓரளவு வெப்பத்தையும் உமிழ்கின்றன. குளிரை விட வெப்பத்தை விரைவாக கடத்தும் தன்மையை கொண்டிருப்பதால் குளிர் காலத்தில் குளிர்ச்சியை உணர்வதற்கு காலதாமதமாகும்.**

**இப்படி கோடை, குளிர் காலத்தில் நிலவும் வானிலை மாறுபாடுகளுக்கு ஈடு கொடுத்து வாழ வேண்டிய அவசியம் ஸ்பெயினில் உள்ள ஸ்டெனிஸ் நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு இல்லை.**

**அங்குள்ளவர்கள் வசிக்கும் பெரும்பாலான வீடுகளின் மேற்கூரைகளாக பாறைகள் அமைந்திருக்கின்றன.**

**மலை முகடுகளுக்குள் வீடுகளை கட்டி அங்கு வசிக்கிறார்கள். வீட்டின் மேற்கூரைகள் பாறைகளாக இருப்பதால் கோடை காலத்தில் வெப்ப தாக்கம் குறைந்து குளிர் சூழலை உணர குளிர்காலத்தில் மிதமான வெப்ப சூழலை அனுபவிக்கிறார்கள்.**

**கன்மலையில் வீடு கட்டியவர்கள் புத்தியுள்ளவர்கள்!**

**ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.**

**பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. (மத். 7:24,25)**

செய்தி : தினத்தந்தி (17.10.2023)



*தேவனையும் அவருடைய சந்தோஷங்களையும் இடைவிடாமல் அனுபவித்துப் பிழைக்க வேண்டிய மனுசன் அதையும் முற்றிலும் இழந்து.*

*தான் ஆசையாய்ப் பற்றிக் கொண்டிருந்த சிற்றின்பங்களையும் விட்டு பிரிந்து நரகத்தில் தள்ளப்படும்போது அவனுடைய ஆத்துமாவின் தாகத்தை அளவிட யாரால் கூடும்?*

*நான்காவதாக, நரகம் நித்திய நிந்தையும் இகழ்ச்சியுமுள்ள இடம்.*

*பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சியும் விழித்து எழுந்திருப்பார்கள் (தானி. 12:2).*

*இந்த ஐசுவரியவான் பூமியில் இருந்த காலத்தில் எவ்வளவோ பெருமையோடும், புகழ்ச்சியோடும் வாழ்ந்தான்.*

*அவனுடைய மகிமையொன்றும் இப்பொழுது அவனை பின்பற்றி செல்லவில்லை. நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் ஆளானான்.*

*பட்டய வெட்டுகளையும், கத்தி குத்துகளையும் சகித்துக் கொள்ளும் வீரன் நிந்தையின் குத்தை சகித்துக் கொள்ள மாட்டான்.*

*நம்முடைய இரட்சகரை சாத்தான் பலவிதமாய் பாடுபடுத்தியும், சிலுவையின் மரணத்தால் வாதித்தும் அவர் தன்னுடைய உறுதியை விட்டு விலகவில்லை.*

*ஆகவே, இறுதியாக நிந்தையை தொடுத்து அவர் மேல் எய்தான்.*

*சிலுவையை சூழ நின்றவர்களும் அதிகாரிகளும் அவரை நிந்திக்கவும், இகழ்ச்சியாக பேசவும் துணிந்தார்கள்.*

*எவ்வளவோ பாடுகளை சுமந்த ஆண்டவருக்கு இந்த நிந்தையான வார்த்தைகள் அதிக வேதனையை உண்டாக்கின.*

*நிந்தை என் இருதயத்தை பிளந்தது. நான் மிகவும் வேதனைபடுகிறேன் என்றார் (சங். 69:20).*

*நிந்தையை சகிக்க கூடாமல் மதிமயங்கிப் போனவர்கள் உண்டு, தேசம் விட்டு ஓடிப்போனவர்கள் உண்டு.*

*பரதேசியாய்ப் புறப்பட்டவர்களும் உண்டு, தற்கொலை செய்து கொண்டவர்களும் உண்டு!*

*நரகமோ, நித்திய நிந்தையும் இகழ்ச்சியும் உள்ள இடம் என்று ஆண்டவர் சொல்கிறார்.*

*நாங்கள் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள், நாங்கள் மோட்சத்துக்கு போகிறவர்கள் என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தும் நரகத்திற்கு போக நேரிடுமானால் அதை பார்க்கிலும் நிந்தை உண்டோ?*

*அந்நாளில் கர்த்தர் அநேகரை பார்த்து அக்கிரமச் செய்கைக்காரரே!*

*என்னை விட்டு அகன்று போங்கள், நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லையென்று சொல்லுவேன் என்கிறாரே.*

*அவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் புறமதஸ்தரல்ல, ஞானஸ்நானமும் இராப்போஜனமும் பெற்றவர்கள் தான் என்பது வசனத்தைப் பார்த்தால் விளங்குகிறதே. (மத். 7:22,23).*

*இந்த நிந்தையுள்ள இடத்திற்கு நாம் தப்பிக்கொள்ள வேண்டுமானால் நமது நிமித்தம் நிந்தைக்குள்ளான ஆண்டவரை உறுதியாய்ப பற்றிக் கொள்ள வேண்டாமா?*

*ஐந்தாவதாக, நரகம் சகல பொல்லாதவர்களும் கூடுகிற இடம்.*

*துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள் (சங். 19:17).*

*இந்த ஐசுவரியவான் தான் மாத்திரமல்ல, மனந்திரும்பாதிருக்கிற தன் ஐந்து சகோதரரும் அந்த வேதனையுள்ள இடத்திற்கு வருவார்கள் என்று அறிந்துக் கொண்டான்.*

*ஆம், நரகம் குணப்படாத சகல பாவிகளும் போய் சேருகிற இடமே!*

*சகல மூர்க்கர்களும், கோபிகளும், தூஷணக்காரரும், கொலை பாதகர்களும், திருடரும், பொய்யரும், விபச்சாரக்காரரும், வேசித்தனக்காரரும், குடியரும்,*

## தேவாலயம்

**சாக்ரடா பேமிலியா கதீட்ரல் எனப்படும் தேவாலயத்தின் கட்டுமானப்பணி 1881-ம் ஆண்டு தொடங்கி இருக்கிறது. அந்த தேவாலயம் பார்சிலோனா நாட்டில் அமைந்திருக்கிறது. கட்டிடக் கலைஞர் ஆண்டனி கவுடி என்பவர் இந்த கட்டுமானத்திற்கு இறுதி வடிவம் கொடுத்திருக்கிறார்.**

**உலகமே வியந்து பார்க்கும் வகையிலான பிரமாண்டமான, கலை வேலைப்பாடுகள் கொண்ட கட்டிடமாக அமைய வேண்டும் என்று அவர் தீர்மானித்திருக்கிறார்.**

**கட்டுமான வரைபடம் தயாரிப்பதற்கு மட்டுமே சுமார் 10 ஆண்டுகாலம் செலவிட்டிருக்கிறார். அவர் எதிர்பார்த்தபடியே கட்டுமான வரைபடம் அமைய, உற்சாகமாக பணியை தொடங்கி இருக்கிறார்.**

**ஆனால் இப்போது போல் கட்டுமான தொழில்நுட்பம் அந்த காலத்தில் இல்லை என்பதால் கட்டுமான பணி மெதுவாக நடந்திருக்கிறது.**

**அவர் எதிர்பார்த்தபடி கட்டுமானத்தில் ஒரு பகுதி கூட நிறைவடையாத நிலையில் 1926-ல் ஆண்டு ஆண்டனி கவுடி உயிரிழ்ந்துவிட்டார். அதனால் கட்டுமான பணியில் சுணக்கம் ஏற்பட்டது. ஆண்டனி கவுடி திட்டமிட்டபடி கட்டுமானத்தை எழுப்புவது சவாலாக மாறியது.**

**இப்போது உலகின் பல பகுதிகளில் இருந்தும் நிதி குவிந்து கொண்டிருக்கிறது. நவீன கட்டுமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பழமை மாறாமல் கட்டுமானத்தை எழுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

**ஆண்டனி கவுடி தேவாலயத்தின் முகப்பு பகுதிகளை நுணுக்கமான வேலைப்பாடுகளால் அலங்கரித்துவிட்டார். தேவாலயத்திற்குள் நுழைவதற்கு 3 நுழைவு வாயில்கள் அமைப்பதற்கு திட்டமிட்டிருந்தார். அவற்றுள் இரண்டு நுழைவு வாயில் பகுதிகள் அமைக்கப்பட்டுவிட்டன.**

**மூன்றாவது நுழைவு வாயில் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒட்டு மொத்த தேவாலய கட்டுமான பணி 2026-ம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கட்டுமான பணி முடிவடையும் போது இது உலகின் மிக உயரமான தேவாலயமாக மாறும்.**

**இந்த தேவாலயத்தையும், அதன் கட்டுமான பணியையும் காண்பதற்காக உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்.**

**அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். (யோவான. 2:19-21)**

செய்தி : தினத்தந்தி (12.10.2023)

## ஆபத்தான வேலைகள்

**மனிதனையே வேட்டையாடக்கூடிய முதலைகளின் இயல்பைத் தெரிந்து கொண்டு அதனைப் பராமரிக்கும் வேலை முதலை மருத்துவர் வேலை. இந்த வேலைக்கு ஒரு ஆண்டிற்கு 41 லட்சம் ரூபாய் சம்பளம் தருகிறார்கள்.**

**புயலை விரட்டிச் சென்று ஆராயும் மனிதர்களும் உலகில் உண்டு. புயல் எங்கு பயணிக்கிறது, எவ்வளவு சேதத்தை ஏற்படுத்துகிறது, எவ்வழியாக பயணிக் கிறது.... இப்படியாக பல தகவல்களை, சேகரித்து கொடுக்க வேண்டும். அப்படி செய்கிறவர்களுக்கு, ஓராண்டிற்கு 40 லட்சம் ரூபாய் சம்பளம் கிடைக்கும்.**

**பாம்பின் தலையை சின்ன டம்ளரில் அழுத்தி பாம்பு பல்லில் உள்ள விஷத்தை அதில் சேகரித்துக்கொண்டே இருப்பது விஷம் சேகரிப்பாளர் வேலை. தைரியமாக செய்ய வேண்டிய நச்சு சேகரிப்பின் மூலம் பெறும் நச்சு திரவம், வாதம், புற்றுநோய்க் கட்டிகள் உட்பட பல நோய்களுக்கான வீரிய மருந்து. இந்த வேலைக்கு சம்பளம் ஓராண்டிற்கு 20 லட்சம் ரூபாய்.**

**எரியும் காட்டிற்கு நடுவே விமானத் திலிருந்து பாராசூட் அணிந்து உயிரைத் துச்சமாகக் கருதி காட்டை காப்பாற்ற காட்டுத்தீ அணைக்கும் வீரர் வேண்டும். இந்த வேலைக்கு சம்பளம் 40 லட்சம் ரூபாய் சம்பளமாக பெறலாம்.**

**பணத்திற்காக உயிரையும் இழக்கத் தக்க வேலைகளை மனிதர் செய்கிறார்கள். வானத்தின் கீழே மனிதனின் பிரயாசத் திற்கு என்றும் பலன் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

**என் கைகள் செய்த சகல வேலை களையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தை யும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை (பிர. 2:11).**

**பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங் களைச் சேர்த்து வைக்கவேண்டாம். (மத். 6:19)**

செய்தி : தினத்தந்தி (17.10.2023)

*அநியாயக்காரரும், பொருளாசைக் காரரும், துஷ்டரும், கபடஸ்தரும், வீணரும், முறுமுறுக்கிறவர்களும், நிர்விசாரிகளும், பரியாசக்காரரும், உல்லாசக்காரரும், தற்பிரியரும், வீம்புக்காரரும், அசுத்தரும், கொடுமைக்காரரும் -*

*துணிகரக்காரரும், துரோகிகளும், பெருமைக்காரரும், இறுமாப்புள்ளவர்களும், மாயக்காரரும், சுயநீதிக்காரரும், அவிசுவாசி களும் ஆகிய சகல அவபக்தர்களும் நரகத்தில் தள்ளப்படுவார்கள்!*

*இவர்கள் எல்லாரும் சேர்ந்த கூட்டம் எப்படிப்பட்ட கூட்டமாயிருக்கும் யோசித்துப் பாருங்கள்.*

*சிங்கங்களும், புலிகளும், சர்ப்பங்களும் தேள்களும் நிறைந்த ஒரு குகையில் எந்த மனுஷன் தங்குவான்?*

*தூஷணம் பேசுகிற இருவர் நடுவில் ஒரு நிமிஷம் இருக்க நம்மால் முடிய வில்லையே.*

*ஓயாச்சண்டையும், கூக்குரலும் கேட்கிற வீட்டை, இது நரகம் என்று சொல்லுகிறோமே! அவர்களோடு சஞ்சரிக்க நம்மால் கூடவில்லையே.*

*அப்படியானால் உலகமே வாந்திப் பண்ணிப்போட்ட இத்தனை பொல்லாத துன்மார்க்கரின் கூட்டம் எப்படியிருக்கும்?*

*அவர்களெல்லாருடைய கூக்குரலும் அழுகையும், பற்கடிப்பும் எவ்வளவு பயங் கரமாயிருக்கும்?*

*பாருங்கள்! குணப்படாதவன் போய்ச் சேரும் பொல்லாதக் கூட்டத்தை மாத்திரமல்ல, அவன் என்றென்றைக்கும் இழக்கிற நல்ல கூட்டத்தையும் கொஞ்சம் கவனியுங்கள்.*

*அன்பு நிறைந்த பிதாவையும், அருமை யான இரட்சகரையும், கிருபையின் ஆவியானவரையும் அவன் விட்டு பிரிய வேண்டும்.*

*பக்தியுள்ள பெற்றோரை விட்டு குணப்படாத மக்களும், இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளை விட்டு குணப்படாத பெற்றோரும் பிரியவேண்டியது வரும்.*

*தேவ பக்தியுள்ள மனைவியை விட்டு பக்தியற்ற புருஷனும் தேவபக்தியுள்ள புருஷனை விட்டு பக்தியற்ற மனைவியும் பிரிய வேண்டியது வரும்.*

*மனம் மாறாத சகோதரர்கள் தங்கள் சொந்த சகோதரரையும் சிநேகிதர்களையும் விட்டுப் பிரிய வேண்டியது வரும்.*

*சகோதரரே! இவை விளையாட்டு பேச்சல்ல நிச்சயமாகவே இப்படி நடக்கும் இங்கே தேவனுடைய பிள்ளைகளும், குணப்படாதவர்களும் ஒரே குடும்பத்தில் இருக்கலாம்.*

## தேடி வாசியுங்கள் - அக்டோபர் 2023

### சரியான விடை

மத். 2:6; யோபு 15:34; உபா. 4:24, எபி. 12:29; எரே. 23:29; லேவி. 10:11; எண். 26:61; எண். 31:22; மாற். 9:49; லேவி. 6:12,18; வெளி. 14:18; எண். 11:3.

### பங்கு பெற்றவர்கள்

களியங்காடு : லலிதா நெல்சன்; திக்கணங்கோடு : பால்தங்கம்; கண்ணனூர் : லாட்லி தேவதாஸ்; ஆசாரிபள்ளம் : ஜெயராணி ராஜரெத்தினம்; ஆலங்குளம் : லில்லி அமிர்தராஜ்; மருதகுளம் : ஜான்சி சந்தியா, ஜெபாகுட்டி மோசஸ்; நாஞ்சான்குளம் : சந்திரா டேகியேல்; காந்திநகர் : பாலா சாமுவேல்; பாக்கியநாதபுரம் : ஜேன் தர்மராஜ்; பண்ணைவிளை : விமலா பெர்னெட்; தூத்துக்குடி : குணசீலி அப்பாத்துரை; ஆனந்தபுரம் : எமிமாள்; புதுக்கோட்டை : ஹெலன் திலக்; சோனகன்விளை : ஹெப்சி எபனேசர்; திருவில்லிபுத்தூர் : சித்திரா; அருப்புக்கோட்டை : மேரி வசந்தா; சங்கரலிங்கபுரம் : பிச்சை; முடக்கத்தான் : தெல்மா ஸ்டேன்லி; போடிலயன் : டேவிட் ஜெயச்சந்திரன்; மதுரை : அருள்மொழி ஜான்சன்; அணைக்குடி : ஆரோக்கியசாமி; திருச்சி : தனசீலி தர்மதாஸ்; மல்லியம்பத்து : ஜாஸ்மின் உஷாராணி, ஜெபசீலி ஜெயக்கொடி; கல்பாளையம் : சுதந்திர தேவி; காரைக்குடி : டாரத்தி ராஜ சுந்தரி; பெருந்தலையூர் : சுகந்தி நரேந்திரன்; பொழிச்சலூர் : கமலா சற்குணம், ஜெபா ஜேம்ஸ்; திருவேற்காடு : ஞானசெல்வம்; பழவந்தாங்கல் : ரூவெல்யா அருள்பிரகாசம்; சூளைமேடு : ஜாண் செல்வின்; நியூ பெருங்களத்தூர் : சூசன் சுமித்ரா; கடப்பேரி : ஜூலியா பால், மேரி சைமன்; பழைய பெருங்களத்தூர் : வசந்தா; மாடம்பாக்கம் : டேவிட் ஜெயக்குமார்; பெங்களூர் : புளோரி சுதந்தர் சிங்;

### பரிசு பெற்றவர்கள்

மருதகுளம் : ஜான்சி சந்தியா; ஆனந்தபுரம் : எமிமாள்; சங்கரலிங்கபுரம் : பிச்சை; மல்லியம்பத்து : ஜெபசீலி ஜெயக்கொடி; பழைய பெருங்களத்தூர் : வசந்தா;

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!



*ஆலயத்திற்கு ஒன்றாய் போகலாம். பள்ளிக்கூடத்தில் ஒன்றாய் படிக்கலாம். அலுவலகத்தில் ஒன்றாய் வேலை செய்யலாம்.*

*இதோ! நாள் வருகிறது, அப்பொழுது ஒருவன் மற்றவனை விட்டு என்றென்றும் பிரிய நேரிடும். இயேசு இராஜாவே அப்படிப் பிரிப்பார்!*

*மெய்விசுவாசிகள் இன்னாரென்றும், மாய்மாலக்காரர் இன்னாரென்றும் அந்நாளில் பட்டப்பகலைப் போல் வெளிப்படும்.*

*இங்கே சொன்னால் அவர்களுக்கு கோபம் வரும். ஆனால் அப்பொழுது நடுநடுங்கி கிறிஸ்துவின் சமூகத்தை விட்டு நீங்குவார்கள்.*

*ஆறாவது, நரகம் நம்பிக்கையில்லாத இடம்.*

*போனோம், சில காலம் இருந்தோம் பின்பு நீங்கினோம் என்றிருக்குமானால் அது காரியம் வேறே.*

*சிறைக்கு போகிறவன் ஆறு மாதங்களோ, ஒரு வருடமோ, பத்து வருடங்களோ தண்டனைக்குட்பட்டிருந்தால்,*

*எப்படியும் ஒரு நாளில் மனைவி மக்களை பார்ப்பேன் என்கிற நம்பிக்கையில் நாட்களை எண்ணிக் கொண்டிருப்பான். நரகத்தில் அந்த நம்பிக்கை இல்லையே.*

*கவனியுங்கள்! ஆபிரகாம் ஐசுவரிய வானைப் பார்த்து "இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு கடந்து வரவும், அவ்விடத் திலிருந்து எங்களிடத்திற்கு கடந்து வரவும்,*

*மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்றான்.*

*இதைவிட தெளிவு வேண்டுமோ? இந்த உவமையைச் சொன்னவர் ரட்சக ரல்லவா?*

*சிலர் இன்று இந்த பெரும் பிளவுக்கு பாலம் போடவும், அதின் வழியாய் நரகத்தி லுள்ளவர்களை மோட்சத்திற்குக் கொண்டு போகவும் பார்க்கிறார்கள்.*

*இவைகளெல்லாம் வெறும் பேச்சு பாலமேயன்றி, நரகத்திலுள்ளவர்கள் கடந்து செல்லக்கூடிய பாலமல்ல.*

*பாவிகளை மோட்சக்கரை சேர்க்க ஒரு உறுதியான பாலம் இருக்கிறது. அந்த பாலம் கர்த்தராகிய இயேசுவே!*

*அவர் உலகத்தில் உள்ளவர்களை மோட்சத்தில் சேர்க்கும் பாலமாய் வந்தா ரேயன்றி, பாதாளத்திற்கு அனுப்பப்பட்ட வர்களை மோட்சத்தில் சேர்க்கும் பாலமாக வரவில்லை.*

*இன்னும் இங்கே இன்னொரு காரியத்தை உங்கள் உயரிய கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன்.*

*நரகத்தில் மனந்திரும்புதல் இல்லை.*

*ஐசுவரியவான், தகப்பனாகிய*

## மறைநெறி மன்னா அக்டோபர் - 2023

### விடை எழுதியவர்கள்

தெருவுக்கடை : F. மரியம்மாள், R. பிளசி, A. ராதா, S. ஆஸ்மி. தேவிகோடு : M. ரெத்தினம், C.T. விஜிலா, J. ஜெர்சி; மிடாலம் : G.L. ராஜம்; மங்கலகுன்று : S.G. ஜான்சிமேரி; பாலப்பள்ளம் : C. கலா; அழகன்பாறை : இன்பராணி பவுல்; திக்கணங்கோடு : T. பால்தங்கம்; கண்ணனூர் : லாட்லி தேவதாஸ்; செங்கோடி : A. சுனிதா; மணவாளக்குறிச்சி : ஜோயல் M.C. மணி; நாகர்கோவில் : ஜெயராணி ராஜரெத்தினம், லலிதா நெல்சன், சார்லட் தங்கம்; விக்கிரமசிங்கபுரம் : ஜாய் மேத்யு; நல்லூர் : S. ஜாய் சந்திரகாந்தா, மரகதம் செல்வராஜ், லில்லி அமிர்தராஜ்; நாஞ்சான்குளம் : சந்திரா டேனியேல்; சோனகன்விளை : ஹெப்சி எபனேசர்; புத்தன்தருவை : S. நோயிலின்; ஆனந்தபுரம் : R. எமிமாள், ராணி ஜாண்சன்; தூத்துக்குடி : குணசீலி அப்பாதுரை; புதுக்கோட்டை : ஹெலன் திலக்; பண்ணைவிளை : விமாலா பென்னட்; திருநெல்வேலி : பாலா சாமுவேல்; நரசிங்கநல்லூர் : E. பூரண செல்வன்; ஸ்ரீவல்லிபுத்தூர் : P. சித்திரா; விச்சூர் : S. ஜெகநாதன்; சங்கரலிங்கபுரம் : பிச்சை; சிவகாசி : S. சாந்தி; அருப்புக்கோட்டை : G. ரூபி எம்மியம்மாள், மேரி வசந்தா; மதுரை : தெல்மா ஸ்டேன்லி, அருள்மொழி ஜாண்சன்; காரைக்குடி : D. டார்த்தி ராஜசுந்தரி; திருச்சி : தனசீலி தர்மதாஸ், K. ஜாஸ்மின் உஷா ராணி, K.S. மாணிக்கவாசகம், பிங்கி றாபின், ஜெபசீலி ஜெயக்கொடி; சமயபுரம் : ஜாய் ஜோசப்; கல்பாளையம் : D. சுதந்திராதேவி; அணைக்குடி : V. A. ஆரோக்கியசாமி; கோயம்பத்தூர் : பிறிஸ்கில்லா வின்செண்ட்; சென்னை : ஜூலியா பால், மேரி சைமன், கமலா சற்குணம், சூசன் சுமித்ரா, பிறேமா ஜெயராஜ், ஆஷா கனகராஜ், கிரேஸ் வில்லியம்ஸ், தங்கமணி விஜயன், M.I. ஜாண் செல்வின், வளர்மதி செந்தில்குமார், எலிசபெத் சாலமோன், நிர்மலா வில்சன், C. கெர்சி கஸ்தூரி, நான்சி ஹென்றி, மாலதி மோகன், லிசி ஆண்ட்றோஸ், B. ஞானசெல்வம், கௌசல்லியா டேனி, ஜோஸ்பின் காட்வின், மரகதம் ஞானசேகரன், சோபியா ஜாண்சன், அமுதா ரங்கன் ராபர்ட், டேவிட் ஜெயக்குமார், C. வசந்தா வாலன்ஸ், ஜரீன் ஃபெபி; பெங்களூர் : பிளாறி சுந்தர்சிங்;

**இம்மாதம் பரிசு பெறுகிறவர்கள் :**

சகோ. **C. வசந்தா வாலன்ஸ்,** சென்னை. சகோ. **லில்லி அமிர்தராஜ்,** நல்லூர்

### நினைவில் கொள்ளுங்கள்!

மறைநெறி (Marai Neri) என்ற முகநூல் கணக்கும் Marai Neri என்ற முகநூல் பக்கமும் தவிர்த்து முகநூலில் எமக்கு வேறு கணக்குகள் கிடையாது. மறைநெறியின் செய்தி களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள கணக்கு களை மட்டுமே தேவ பிள்ளைகள் பயன்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி!

### புத்தகங்கள் வெளியீடு

**நமது மறைநெறி பெந்தெகொஸ்தே மிஷன் நிறுவனர் Pr. D.S. ஞானதாஸ் அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் எம்மிடம் உள்ளது. வாசகர்கள் புத்தகங்களை பயன்பெற்று மற்றவர்களுக்கும் அறிமுகப் படுத்துங்கள்.**

**வாசித்து பயன்பெற விரும்பினால் கீழே கொடுக்கப்பட்டுள்ள அலைப்பேசி எண்ணிலோ அல்லது கடிதம் மூலமாகவோ எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.**

**புத்தகங்களின் பட்டியல் :**

1. நாம் தேவனுடைய பிள்ளைகள்
2. நாத்திகரும் நாமும்
3. ஏன் வேண்டும் ஞானஸ்நானம்
4. அபிஷேகமும் அந்நிய பாஷையும்
5. நாத்திக வேதமும் எதிர் வேதமும்

**தொடர்புக்கு : 9487585762**

### Whats App–ல்

**"9487585762" என்ற மறைநெறி எண்ணுக்கு Whats App கணக்கு துவங்கப்பட்டுள்ளது. நீங்கள் Whats App-ல் பயன்படுத்தும் அலைபேசி எண்ணை எங்க ளுக்கு தெரியப்படுத்தினால் மறைநெறியை Whats App வழியாக அனுப்பி வைப்போம். தகவல்கள் பரிமாறிக் கொள்ள விரும்புகிறவர்கள் இதை பயன் படுத்திக் கொள்ளலாம்.**

ஆபிரகாமே! மரித்தோரிலிருந்து ஒருவன் போனால் என் சகோதரர்கள் மனந்திரும்புவார்கள் என்கிறான் (லூக். 16:27-30).

நரகத்தில் மனந்திரும்புதல் உண்டானால், இவனுக்கு இவ்வளவு ஆத்தும பாரம் உண்டாயிருக்காதே!

மனந்திரும்ப வேண்டுமானால் பூமியில் இருக்கும் போதே மனந்திரும்பியிருக்க வேண்டும் என்று ஐசுவரியவான் அறிந்திருந்தானே!

தம்மிடத்தில் அதிக சிலாக்கியங்களை பெற்ற பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபோது அதற்கென்ன பரவாயில்லை; மறுமையில் மனதிருப்தி கொள்ளலாம் என்று இரட்சகர் சொல்லாமல்,

அந்த பட்டணங்களைக் கடிந்துக் கொண்டு நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுக்கு நேரிடும் கோபாக்கினையை கூறி அறிவித்தாரே!

“இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்”

“இன்று”, “இப்பொழுதே” என்று ஆவியானவர் சொல்லுகிறார்; இனிமேல் என்றும் பிற்பாடு என்றும் பிசாசு சொல்லுகிறான்.

இன்னும் கிருபையின் காலத்தில் மனந்திரும்பாமற் போகிறவர்கள் கோபாக்கினையின் காலத்தில் எப்படி மனந்திரும்பக் கூடும்?

இங்கே வேதம் உண்டு! போதனைகள் உண்டு! பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் ஆவியானவரின் கிரியைகள் உண்டு.

ஒரு பாவி மனந்திரும்பி இரட்சிக்கப் படத்தக்கதாக எத்தனையோ கிருபையின் எத்தனங்களெல்லாம் இங்கேயுண்டு.

இப்படிப்பட்ட கிருபையின் காலத்திலுங் கூட அநேகர் தங்களைக் கடினப்படுத்திக் கொள்ளுகிறார்களே!

அப்படியிருக்க, கிருபையின் எத்தனங்களெல்லாம் முற்றிலும் எடுப்பட்டுப் போகும் நரகத்தில் பாவிகள் எப்படி மனந்திரும்புவார்கள்?

உபத்திரவம் மனந்திரும்புதலை உண்டாக்கமாட்டாது. உபத்திரவத்தோடு கிருபையும் சேரும் போது மனந்திரும்புதல் உண்டாகக்கூடும்.

கிருபையற்ற மனுஷனுக்கு நரக வேதனை மனக்கடினத்தை உண்டாக்குமேயன்றி மனமாறுதலை உண்டாக்கமாட்டாது.

மேலும் தேவன் எவ்வளவு கிருபையுள்ளவராயிருந்தாலும் மனந்திரும்பாத பாவிக்கு அவர் மோட்சத்தைக் கொடுப்பதெப்படி?

மோட்சமானது ஆவியானவரால் ஆயத்தமாக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவினால் ஆயத்தமாக்கப்பட்ட இடம்.

குணப்படாத ஒருவனை அங்கே கொண்டுபோய் வைத்தாலும் கூட அவன் அங்கே இருக்கமாட்டான்.

மகிமையின் தேவனைத் தரிசிக்கவும், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடையவும் அவன் தகுதியாக்கப்பட்டவனல்ல (கொலோ. 1:12).

அவர்களெல்லாரும் நன்றியறிதலினால் பொங்கி, ஆனந்த பரவசமடைந்து ஆட்டுக்குட்டியானவரைப் போற்றும் போது இரட்சிக்கப்படாத இவன் என்ன ஸ்தோத்திரத்தைப் பாடப்போகிறான்? (வெளி. 7:10).

“என்னை இவ்விடத்திலிருந்து கொண்டு போய் விடுங்கள்” என்று கதறமாட்டானா?

இன்னும் இங்கே இன்னொரு காரியமும் சொல்லியாக வேண்டும்.

அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத். 25:46).

## பிரமாண்ட கோபுரம்

**இந்தியாவில் சிலிக்கான் நகரம் என்று அழைக்கப்படும் அளவுக்கு உள்நாடு மற்றும் சர்வதேச தொழில் நுட்ப நிறுவனங்களை ஈர்க்கும் தகவல் தொழில்நுட்ப நகரமாக விளங்கும் பெங்களூருவுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் பிரமாண்ட டவர் அமைக்கப்பட உள்ளது.**

**சுமார் 250 மீட்டர் உயரத்துக்கு இந்த வானுயர கோபுரத்தை எழுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.**

**இது கட்டமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்தால் நாட்டிலேயே மிக உயரமான கோபுரமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டம் தொடர்பாக கர்நாடக மாநில துணை முதல்-மந்திரி டி.கே. சிவகுமார் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.**

**பெங்களூரு நகரின் மத்தியில் 8 முதல் 10 ஏக்கர் நிலத்தை அடையாளம் காணுமாறும், திட்டத்திற்கான நிதியை மதிப்பிடுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

**ஸ்கை டெக் எனப்படும் இந்த வானுயர கோபுரத்தை நவீன முறையில் வடிவமைப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.**

**இந்த பிரமாண்ட பார்வையாளர் கோபுரம் ஆலமரத்தை அடிப்படையாக கொண்டு நவீன அம்சங்களுடன் வடிவமைக்கப்பட உள்ளது. அதன் கிளைகள் போல் அடிப்பகுதியில் இருந்து மேல் பகுதி வரை பரவி இருக்குமாறு பின்னிபிணைந்த கட்டமைப்புகளை கொண்டதாக அமைகிறது.**

**ஒவ்வொரு பிரிவிலும் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையிலான பொழுது போக்கு அம்சங்கள் இடம்பெற உள்ளன. அதாவது உணவகம், ஷாப்பிங் சென்டர்கள், தியேட்டர், தோட்டம், ரோலர் கோஸ்டர் ஸ்டேஷன் உள்பட பல்வேறு வகையான பொழுது போக்கு மையங்கள் நிறுவப்படும்.**

**சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு ஒளிரும் மலர் போல், மலர் போன்ற பகுதியை விளக்குகளால் அலங்கரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

**இந்த பார்வையாளர் கோபுரத்தின் மாதிரி கட்டமைப்பை கொண்ட வீடியோவை துணை முதல்-மந்திரி டி.கே. சிவகுமார் தனது எக்ஸ் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.**

**இதைக் கேட்கும் பொழுது பாபேல் கோபுரம் நினைவிற்கு வருகிறது. பெயர் உண்டாக வேண்டும் என்பதற்காய் எதற்கும் பயன் இல்லாத பிரமாண்ட கோபுரம் கட்டுகிறார்கள். அதற்காய் பெரும் பணம் செலவு செய்கிறார்கள்-வீணடிக்கிறார்கள்.**

**நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள் (ஆதி. 11:4)**

செய்தி : தினத்தந்தி (24.10.2023)

**அறிமுகப்படுத்துங்கள்**

**மறைநெறியை பிறருக்கு அறிமுகப்படுத்தி வாசகராக்குங்கள். மறைநெறியின் வளர்ச்சிக்கு உதவுங்கள்.**



ஒரே வசனத்தில் வருகிற இந்த இரண்டு நித்தியத்தில் ஒரு நித்தியம் முடியாதது என்றும் இன்னொரு நித்தியம் முடிந்து போகும் காலமென்றும் அர்த்தப் படுத்துவது ஒரு போதும் சரியல்ல!

நியாயம் விசாரிக்கப்பட்டவுடனே துன்மார்க்கரெல்லாம் இல்லாமல் அழிக்கப் பட்டுப் போவார்கள் என்று சிலரும்,

அப்படியல்ல, கொஞ்சகாலம் தண்டிக்கப் பட்டபின் தேவன் எல்லாரையும் மோட்சத்தில் சேர்த்துக் கொள்வார் என்று வேறு சிலரும் சொல்லுகிறதுண்டு.

இது புதிதான உபதேசம், வேதத்துக்கு புறம்பான உபதேசம்.

இந்த உபதேசம் குணப்படாதவர்களுக்கு அதிக பிரியம், இது நிர்விசாரத்தையும் துணிகரத்தையும் உண்டாக்குமேயன்றி பரிசுத்தத்தை உண்டாக்கவில்லை.

அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும், போவார்கள் என்றார். (மத். 25:46).

கொஞ்சகாலம் ஆக்கினை என்றால் “நித்திய ஆக்கினை” என்று ஏன் ஆண்டவர் சொல்ல வேண்டும்.

அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும் என்றும் “அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்களென்றும்” சொல்லியிருப்பானேன். (வெளி. 14:11, 20:10).

தர்க்கம் நமக்கு வேண்டியதில்லை யார் என்ன சொன்னாலும், நமக்காக ஜீவனை கொடுத்த ஆண்டவருடைய வார்த்தையையே நம்ப வேண்டும்.

நரகத்தின் பயங்கரங்களை நரகத்திற்கு போகிறவர்களேயன்றி வேறே யார் அறியக்கூடும்?

அந்நாளில் நாம் தூரத்தில் நின்று கொண்டு மோட்சத்திற்கு போகிறவர்கள் யார்? நரகத்திற்கு போகிறவர்கள் யார் என்று பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

நாமும் அவ்விரண்டில் ஒரு பக்கத்தில் தான் நிறுத்தப்படுவோம்.

பிரிய சகோதரனே, சகோதரியே நரகாக்கினைக்குத் தப்பிக்கொள்வோம் என்கிற நிச்சயம் உங்களுக்குண்டா?

**மறைநெறி சுடர்**
**ஆண்டு சந்தா 100 ரூபாய்**
முகவரி :
**மறைநெறி சுடர்**
பாலூர், கருங்கல் - 629 157
குமரி மாவட்டம்

**தாங்குங்கள்**

**மறைநெறி சுடர் வெளியிட தேவைகள் அதிகம். மாதந்தோறும் கொடுத்து தாங்குகிறவர்கள் எழும்ப வேண்டும். செபியுங்கள்.**

இல்லையானால் இன்றே மனந்திரும்புங்கள் ஞானஸ்நானம் பெற்று அபிஷேகம் பெற்று தேவ சபையோடு ஐக்கியப்படுங்கள். பாவத்தை விட்டு, பாவிகளை விட்டு வாருங்கள்- வாழுங்கள்.

நரகாக்கினைக்கு தப்பிக் கொள்ளுங்கள்!

**-தேவ கிருபை**

சிருஷ்டிப்பின் மகத்துவம்

## மூளை வளர்கிறது

பொதுவாக உடல் உறுப்புக்கள் இருபது வயதிற்கு மேல் வளர்ச்சியடைவதில்லை. ஆனால் சில அறிஞர்களின் மூளை வளர்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், பல விசித்திர மாற்றங்களையும் அடைகிறதாம்.

சர் ஆர்தர் கீத் என்ற மூளை ஆய்வாளர், பல்லாயிரக்கணக்கான மூளைகளை ஆராய்ந்த பின்னர் சில உண்மைகளை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் அரசியல் மேதையான கிளாட்ஸ்டன் பிரதம மந்திரியாக இருந்த போது, அவரது மூளை ஓர் அங்குலம் அளவு வளர்ந்ததாம்.

அதைப் போன்றே மற்றொரு பிரிட்டிஷ் அரசியல் மேதையான லாயிட் ஜார்ஜின் மூளை வளந்ததோடு மட்டுமல்லாமல், உலகப்போர் நடக்கையில் உருமாற்றமும் அடைந்ததாம்.

பிரபல தொல்பொருள் ஆய்வாளரான பிண்டர்ஸ் பிட்ரியின் மூளை 6.5 அங்குலத்திலிருந்து 7.5 அங்குலம் வரை அவருடைய 50-வது வயதில் வளர்ச்சியடைந்ததாம்.

பொதுவாக மூளையின் திறனுக்கும் அதன் அமைப்புக்கும் சம்பந்தமில்லை. பெரிய மூளையாக இருந்தால் அதிக திறனிருக்கும் என்பதெல்லாம் உண்மையல்ல.

திறனுள்ள மூளை என்பது, அதில் படிந்துள்ள பள்ளங்கள், மேடுகள், மற்றும் வீக்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அமைவதோயாகும்.

“சில அறிஞர்களின் மூளை விசித்திரமான வளர்வதற்கு இந்த வீக்கங்களும் மேடுகளுமே காரணம்” என்கிறார் ஆர்தர் கீத்.

சராசரியாக ஒரு ஆணின் மூளை எடை அளவு 1 கிலோ 360 கிராம். பெண்ணின் மூளை 1 கிலோ 250 கிராம்தான். இதற்காக பெண்கள் ஆண்களை விட அறிவாற்றல் குறைந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது.

ஞானத்தை அருளுகிறவர் தேவன். தம்மை நோக்கி கேட்கிறவர்களுக்கு அவர் சம்பூரணமாய் கொடுக்கிறவர்.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும் (யாக். 1:5).

தேவன் ஞானத்தை தருகிறவர் என்பதை நாம் வேதத்தில் பல இடங்களில் வாசிக்கின்றோம்.

உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுதில்லை (1 இரா. 3:12).

இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார் (தானி. 1:17).

தமிழில் : **கிதியோன்**

*நெஞ்சில் நிறைந்தவர்கள்*

தொகுப்பு : **J.R. விஜயகுமார்**

# எலிசபெத் ஃப்ரை

குற்றம் செய்ததால் பிடிக்கப்பட்டு, தண்டனை கிடைத்ததால் அடைக்கப்பட்டு, சிறைச் சாலையில் காலங்களைக் கழிப்பவர்களை சமூகம் பொருட்படுத்தவில்லை. ஆனால் சர்வவல்ல தேவனாகிய கர்த்தர் அவர்களை மறப்பதில்லை. இன்று சிறை ஊழியம் பல நாடுகளிலும், பல சபைகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் உன்னத ஊழியம். அவைகள் எல்லாவற்றுக்கும் முன்னோடியாய்த் திகழ்வது எலிசபெத் ஃப்ரை ஆரம்பித்த ஊழியமே. அகில உலகுக்கு எலிசபெத் ஃப்ரை ஒரு சிறை சீர்திருத்தக்காரர் என்று மட்டுமே தோன்றினாலும் கிறிஸ்தவ வட்டாரத்தில் அவர் சிறைக் கைதிகளின் மிஷனெரி என்றே கருதப்படுகிறார்.

இங்கிலாந்து நாட்டில் மிகவும் செல்வாக்குள்ள குடும்பத்தில் 21 மே 1780 இல் பிறந்த எலிசபெத். வாலிபப் பருவத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்டார். நார்விக் பட்டணத்தில் தன்னுடைய ஊழியத்தைத் துவக்கினார். ஆரம்பத்தில் நார்விக் நகரின் ஏழை எளியவர்களைச் சந்தித்து அவர்களுக்கு வேதாகமத்தைக் கற்றுக் கொடுப்பதும், ஏழைக் குழந்தைகளுக்கு ஞாயிறு பாடசாலை நடத்துவதும் அவருடைய ஊழியமாக இருந்தது. திருமணமான பின்பு எலிசபெத் ஃப்ரை எஸ்ஸெக்ஸ் என்னும் நகரில் ஊழியத்தைத் தொடர்ந்தார். சுகவீனர்களைப் பராமரிக்கவும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் துவங்கினார். ஆனால் அந்த ஊழியத்தில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டது. 19–ம் நூற்றாண்டின் துவக்கத்தில் நியூகேட் என்று அழைக்கப்படும் சிறைச்சாலையில் சீர்கெட்ட நிலைமைகள் இருப்பதாக அறிந்த எலிசபெத் உடனே செயல்பட ஆரம்பித்தார். நூற்றுக்கும் மேற்பட்ட பெண் கைதிகள் மிகச்சிறிய அறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். எவ்வித சுகாதாரமும் இல்லாமல் அழுக்கிலும், பயங்கரக் குளிரிலும் அவர்கள் வாடிக் கொண்டிருப்பதைக் கண்டவுடன், எலிசபெத் நகரத்தின் மேலதிகாரிகளைத் தொடர்பு கொண்டார். அதுவரை கைதிகளைப் பற்றிய அக்கறை யாருக்குமே இல்லை. நாளடைவில் எலிசபெத்தின் கோரிக்கைகள் கேட்கப்பட்டது. சிறைச்சாலையின் நிலைமையில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின.

ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் குறித்த நேரத்தில் ஜெபமும், வேதவாசிப்பும் நடத்தப்பட்டது. தையற் கல்வியும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதுவரை வாழ்வை விரக்தியுடன் கழித்த கைதிகள் தையல் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். அதில் கிடைத்த வருமானம் அவர்களை நேர்மையுடனும், சுய மரியாதையுடனும் நடக்க உதவியது. எலிசபெத் ஃப்ரை செய்த மற்றுமொரு முக்கிய சீர்திருத்தம் உண்டு. அந்த நாட்களில் லண்டன் நகரிலிருந்து கைதிகளைக் கப்பலில் ஏற்றி வெகு தூரத்தில் இருக்கும் ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள சிறைகளுக்குக் கொண்டு போய் விடுவது வழக்கம். அப்படிக் கொண்டு போகும் போது பெண் கைதிகளை அதிகாரிகள் மிகவும் ஈனமாக நடத்தினார்கள். நீண்ட கடல் யாத்திரையின்போது கூட கைதிகளின் விலங்குகளைக் கழற்றவில்லை. நோயுள்ளோருக்கு எந்தவித மருத்துவ சிகிட்சைகளையும் அளிக்கவில்லை. ஆஸ்திரேலியாவை அடைந்த பின்பும் கைதிகள் அடிமைகளாகவே வாழ்ந்தனர்.

இவைகளை அறிந்த எலிசபெத் ஃப்ரை அரசாங்க அதிகாரிகளிடம் முறையிட ஆரம்பித்தார். அவருடைய விடாமுயற்சியினால், மேலே கூறப்பட்ட கொடுமைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுத்து நிறுத்தப்பட்டன. நியூகேட்டில் ஆரம்பித்த சிறை சீர்திருத்தங்கள் விரைவில் நாட்டிலுள்ள மற்ற சிறைச் சாலைகளிலும் வலியுறுத்தப்பட்டது. எலிசபெத் ஃப்ரையின் கனிந்த இதயத்தைக் கைதிகள் கண்கூடாகக் கண்டனர். ஒவ்வொரு தடவையும் கைதி கப்பல்கள் இங்கிலாந்திலிருந்து புறப்படும்போது, எலிசபெத் அங்கு சென்று எல்லாருக்கும் ஆளுக்கு ஒரு வேதாகமமும், கம்பளி உடைகள் பின்னுவதற்கு வேண்டிய நூல்களையும், ஊசிகளையும் கொடுத்து அன்புடன் வழியனுப்பிவிட்டு வருவார். இப்படி ஒன்றிரண்டு தடவைகள் அல்ல, 25 வருடங்களாக ஊழியம் செய்த எலிசபெத் ஃப்ரை 12 அக். 1845 இல் இயற்கை எய்தினார்.

பெண்கள் அதிகமாக வெளியே செல்வதை சமுதாயம் விரும்பாத காலக் கட்டத்தில் எலிசபெத் ஃப்ரையைத் துணிச்சலுடன் செயல்பட வைத்தது, கர்த்தர் மீது அவர் வைத்த அளவற்ற அன்பும், பயனுள்ள சேவையைச் செய்ய வேண்டும் என்ற உறுதியும் தான். அவரை அவ்வாறான ஊழியத்திற்கு அழைப்பித்தது. கட்டுண்டவர்களை விடுதலையாக்க வந்த கர்த்தராகிய இயேசுவை காவலில் அடைக்கப்பட்டவர்களுக்கு நாம் அறிவிக்கும்போது, 'காவலில் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்' என்று சொல்லி மகிழுவார். சிறை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்!

## எதிரொலி

மறைநெறி மன்னாவில் கேட்கப்படுகின்ற கேள்விகளை படித்து பதில் எழுதும் போது, அநேக காரியங்களை யோசிப்பதற்கு, ஆவிக்குரிய பிராகாரமாய் இருக்கிறது. தேடி வாசியுங்கள் பகுதி பதிலை கண்டு பிடிக்க சிரமமாய் இருந்தாலும், சில புதிய வசனங்களை கற்றுக் கொள்ளவும், அவை என் உள்ளத்தில் அனல்மூட்டுவதாகவும் உள்ளது. மொத்தத்தில் தேவனோடு உறவு வைத்துக்கொள்ள அடுத்த இதழ் எப்போது வரும் என்று தோன்றுகிறது.

**- V.A. ஆரோக்கியசாமி,** தஞ்சாவூர்



## புதையல்!

- ✤ உன் நம்பிக்கையை பணத்தின் மீது வைக்காதே, பணத்தை நம்பிக்கையான இடத்தில் வைத்துவிடு.
- ✤ உனது திறமைக்கு இளமையென்றும், மூப்பு என்றும் எதுவும் கிடையாது.
- ✤ நமக்கு மரணம் நிச்சயம். மரணத்தைத் தவிர வேறோர் பெரிய துன்பம் வரப் போவதுமில்லை. எனவே மரணத்தைக் கண்டு அஞ்சத் தேவை இல்லை.
- ✤ உனது பேச்சு பிறரை உன் பக்கம் இழுத்து உட்காரச் செய்ய வேண்டும். இல்லையேல் பேசாமல் இருப்பதே உத்தமம்.
- ✤ பேச்சுத் தொடங்கி விடுகையில் வீணில் அவற்றைக் குறைக்கப் பார்ப்பதைவிட, வாயையே திறவாமல் இருந்து விடுதல் எப்பொழுதுமே மிகவும் எளிது.
- ✤ நாம் உலகிற்கு வந்தது சேவை செய்வதற்கே, பிறரை அடக்கி ஆளு;வதற்கு அன்று.
- ✤ உங்களிடம் இல்லா குணத்தைப் பற்றி அதிகமாகப் புகழ்பவன், உங்களில் இருக்கும் பொருளை எடுத்துச் செல்லவே விரும்புகிறான்.
- ✤ மண் மண்ணோடு சேராமல் இருக்கலாம். ஆனால் மனிதன் மனிதனை விட்டு முற்றிலும் பிரிந்திருக்க முடியாது.
- ✤ ஒருவன் செய்யத் தகாதவைகளைச் செய்வது எவ்வளவு அநீதியே, அதுபோல் செய்யத் தக்கவற்றைச் செய்யாமல் இருப்பதும் அவ்வளவு அநீதியே ஆகும்.

## மறைநெறி மன்னா - டிசம்பர் 2023

### வருடத்திற்கு ஒருமுறை வேதத்தை முழுமையாக வாசிக்க உதவிடும் திட்டம்

| எண் | வேத பகுதி | கேள்விகள் |
|---|---|---|
| 1. | 2 கொரி. 1–3 | யார் ஏன் எதை நோக்கிப் பார்க்ககூடாதிருந்தார்கள்? |
| 2. | 2 கொரி. 4–6 | ஏன் நாம் கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்? |
| 3. | 2 கொரி. 7–9 | எது ஏன் சம்பூரண பலனுள்ளதாய் இருக்கும்? யாருடைய எது என்றென்றைக்கும் நிற்கும்? |
| 4. | 2 கொரி. 10–13 | அப். பவுல் எவைகளுக்காக பயந்திருக்கிறேன் என்கிறார்? |
| 5. | கலாத். 1–3 | தேவன் எவர்களை எவைகளுக்கு பலப்படுத்தினார்? |
| 6. | கலாத். 4–6 | எவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை? |
| 7. | எபேசி. 1–3 | எதை நினைத்துக்கொள்ளுங்கள் என அப். பவுல் கூறுகிறார்? |
| 8. | எபேசி. 4–6 | கிறிஸ்து எதற்காக தம்மைதாமே ஒப்புக்கொடுத்தார்? |
| 9. | பிலிப். 1–4 | எதற்காக அப். பவுல் எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் என்கிறார்? |
| 10. | கொலோ. 1–4 | எதற்கு எது கிருபை பொருந்தினதாக இருக்கவேண்டும்? |
| 11. | 1 தெச. 1–5 | பகலுக்குரியவர்களாகிய நாம் எவைகளை தரித்துக்கொண்டிருக்க வேண்டும்? |
| 12. | 2 தெச. 1–3 | அப். பவுல் எவைகளுக்காக எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்கிறார்? |
| 13. | 1 தீமோ. 1–3 | தேவபக்திக்குரிய இரகசியமானது யாவை? |
| 14. | 1 தீமோ. 4–6 | தேவனுடைய மனுஷன் எவைகளை விட்டோடி எவைகளை அடையும்படி நாட வேண்டும்? |
| 15. | 2 தீமோ. 1–4 | அப். பவுல் ஏன் கடிந்து கொண்டு புத்திச்சொல்ல சொல்லுகிறார்? |
| 16. | தீத்து & பிலே | ஏன் எதை நினைப்பூட்ட அப். பவுல் கூறுகிறார்? |
| 17. | எபிரெயர் 1–3 | எப்போது கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்? |
| 18. | எபிரெயர் 4–6 | எது எதற்கு முடிவு? இயேசு எந்த முறைமையின்படி என்னவாய் எங்கே பிரவேசித்திருக்கிறார்? |
| 19. | எபிரெயர் 7–9 | கிறிஸ்துவானவர் எப்படி நித்திய மீட்பை உண்டுபண்ணினார்? |
| 20. | எபிரெயர் 10–13 | எவைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்? நீங்கள் எவைகளினிடத்தில் வந்து சேர்ந்தீர்கள்? |
| 21. | யாக்கோ. 1–5 | யார் என்ன செய்து திரளான பாவங்களை மூடுவான்? |
| 22. | 1 பேதுரு 1–5 | எதற்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்? |
| 23. | 2 பேதுரு 1–3 | எவர்களுடைய எது எதிலும் கேடுள்ளதாயிருக்கும்? |
| 24. | 1 யோவா. 1–5 | பொல்லாங்கன் யாரை தொடான்? எவைகளை அறிந்திருக்கிறோம்? |
| 25. | 2,3 யோவா.&யூதா | யார் தேவனால் உண்டாயிருக்கிறான்? யார் பிதாவையும் குமாரனையும் உடையவன்? |
| 26. | வெளி. 1–4 | தேவன் பிலதெல்பியா சபையின் தூதனுக்கு தன்னை யார் எனக்கூறுகிறார்? |
| 27. | வெளி. 5–8 | மூன்றாம் தூதன் எக்காளம் ஊதிய போது சம்பவித்தது என்ன? |
| 28. | வெளி. 9–12 | எப்போது எவர்களுக்கு பயமுண்டாயிற்று? |
| 29. | வெளி. 13–16 | பெரிய நதி எது? எப்போது எவர்களுக்கு இளைப்பாறுதலிராது? |
| 30. | வெளி. 17–19 | எவர்கள் எதைப்பார்த்து எப்படி அழுது ஓலமிடுவார்கள்? |
| 31. | வெளி. 20–22 | நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் எந்த இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன? |

- ❖ விடைகளை இருப்பிடத்துடன் எழுதி ஜனவரி 10–ம் தேதிக்குள் கிடைக்குமாறு ***"மறைநெறி மன்னா"***, எண் : 8/31 பஜனை கோயில் தெரு, பொழிச்சலூர், சென்னை – 600 074 என்னும் முகவரிக்கு வாசகர் எண், பெயர், முழு முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், தொலைபேசி எண் இவைகளை தெளிவாக எழுதி சரியான தபால் தலை ஒட்டி அனுப்பவும்.
- ❖ 12 மாதங்களும் எல்லா வினாக்களுக்கும் சரியான விடை எழுதுகிறவர்களுக்கு பரிசுத்த வேதாகமம் பரிசாக கிடைக்கும்.
- ❖ மாதம்தோறும் இருவர் குலுக்கல் முறையில் ஆவிக்குரிய புத்தகம் பரிசாக பெறுவர்.
- ❖ விடைகள் தபாலில் தவறுவதை தவிர்க்க தட்டச்சு செய்து PDF வடிவத்தில் maraineriministries@gmail.com என்ற மின்னஞ்சலிலும் அனுப்பலாம்
- ❖ கொடுக்கப்பட்ட பகுதியை நாள்தோறும் கருத்தாய் வாசித்து ஒரு ஆண்டில் முழு வேதாகமத்தையும் படியுங்கள்.

**சகோ. J.R. விஜயகுமார்,** Cell No. 9444009044

## பொன்மொழி

**நரகத்துக்குள் உட்செல்ல கோடி வழிகள் இருக்கும்.....**

**ஆனால் அதிலிருந்து வெளியேற ஒன்று கூட இல்லை!**

**– லியோனார்ட் ரேவன்ஹில்**

## கவனிக்கவும்

மறைநெறி மன்னாவுக்கு விடை எழுதும் போது வசனத்தை அப்படியே எழுதாமல் கேள்விக்கான விடைகளை மட்டும் முழுமையாய் எடுத்து எழுதி இருப்பிடத்தை குறிப்பிடவும்.